RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt2246-22296

# அகநானூறு காட்டும் மகட்போக்கிய தாயின் உணர்வுநிலை

**சொ.நே. அறிவுமதி** [அ, *]

[அ] தமிழ்த்துறை, டோக் பெருமாட்டி கல்லூரி, மதுரை-625002, தமிழ்நாடு, இந்தியா.

# Mother's Sensibility in Akananuru

**S.N. Arivumathi** [a, *]

[a] Department of Tamil, Lady Doak College, Madurai-625002, Tamil Nadu, India

* Corresponding Author: arivu1907@gmail.com

Received: 22-09-2022
Revised: 08-11-2022
Accepted: 15-11-2022
Published: 05-12-2022

Check for updates

**ABSTRACT**

One of the literatures that have succeeded in distilling human feelings into writings is the Sangam literature. Sangam internal literary work showed the feeling of pleasure and pain occured between hero and heroine and also recorded the mood of the friend and mother who are affected by the love life of both hero and heroine. The statement of heroine's mother appears in Sangam literary works. Most of the songs in them are lamentations in the contexts of reconciliation. The mother-child relationship is the primary relationship among all living beings. The perspective of the poets of that time who have shown the deep feelings in the mother's mind when she realizes that the daughter has suddenly left her and moved with an unknown person to an unknown place is significant. In the Sangam literature, there are 13-31 sub-songs in Akananuru. Next to Kalithogai the mother's lamentation songs are highly counted in Akananuru. The 24 songs in Akananuru is about the mother's state of mind.

**Keywords:** Sangam Literature, Relationship, Akananuru, Mother

## முன்னுரை

மனிதர்களின் உணர்வுகளை எழுத்துக்களாக வடித்ததில் வெற்றி பெற்ற இலக்கியங்களுள் ஒன்று சங்க அக இலக்கியங்கள். காதலினால் விளைந்த இன்பமானாலும் துன்பமானாலும் அதை உணர்வுறக் காட்டிய சங்க அக இலக்கியங்கள், தலைவன், தலைவியைக் கடந்து, அக்காதல் வாழ்வினால் பாதிக்கப்படும் தோழி, தாய் ஆகியோரின் மனநிலையையும் பல இடங்களில் பதிவு செய்துள்ளன. உடன்போக்கில் மகள் பிரிந்து சென்றவுடன் தாய்க்கு ஏற்படும் துயரை மகட்போக்கிய பாடல்கள் காட்டுகின்றன. தலைவன் - தலைவியின் உறவினர்களில் தலைவியின் தாயின் கூற்று மட்டுமே சங்க அக இலக்கியங்களில் இடம்பெறுகிறது. அவற்றிலும் பெரும்பான்மையான பாடல்கள் உடன்போக்கு நிகழ்கின்ற சூழல்களில் புலம்புவதாகவே அமைந்துள்ளன. மனிதர்கள் மட்டுமின்றி அனைத்து உயிர்களிலும் உறவுகளில் முதன்மையான உறவாக தாய் - மகவு உறவே அமைகிறது. அத்தகைய உறவில் தானறியாமல், திடீரென மகள் தன்னை விட்டு, அறியாத ஒருவனுடன் அறியாத இடத்திற்குப் பிரிந்து சென்றதை உணர்ந்தவுடன் தாயின் மனநிலையில் ஏற்படும் ஆழமான உணர்வுகளைக் காட்டியிருக்கும் அக்கால புலவர்களின் நுண்ணோக்கு குறிப்பிடத்தக்கது. சங்க அகஇலக்கியங்களில் 13-31 அடிவரையறை கொண்ட பாடல்கள் அகநானூற்றில் இடம்பெற்றுள்ளன. இவ்வடிவரையறையினால் கலித்தொகையை அடுத்துத் தாயின் நீண்ட புலம்பல்கள் அகநானூற்றில்தான் இடம்பெற்றிருக்கின்றன. அகநானூற்றின் 24 பாடல்கள் மகட்போக்கிய தாய் பேசுவதாக அமைந்து தாயின் மனநிலையைக் காட்டுகின்றன.

## உடன்போக்கு

களவுப்பாடல்கள் பாடப்பட்ட சூழல்களுள் முக்கியமான ஒன்றாக உடன்போக்கு அமைகிறது. “122 பாடல்கள் - களவுச்செய்யுட்களில் ஏழில் ஒரு கூறு இத்துறைப் பாலன” (வ. சுப. மாணிக்கனார், 1957). தலைவனும் தலைவியும் இணைந்து செலவு மேற்கொளினும் உடன்போக்குப் பாடல்கள் பிரிதலை உரிப்பொருளாகக் கொண்ட பாலைத்திணையிலேயே இடம்பெற்றிருக்கின்றன.

“கொண்டுதலைக்கழிதலும் பிரிந்தவண் இரங்கலும்

உண்டென மொழிப ஓர்இடத்தான”

தலைவி தமரைப் பிரிவது பாலைத்திணைக்கான இருவகைப் பிரிவில் ஒன்று என இளம்பூரணர் குறிப்பிடுகிறார் (Ilampurananr, 2004). “இருவகைப் பிரிவாவன தலைமகளைப் பிரிதலும் தலைமகளை உடன்கொண்டு தமர்வரைப் பிரிதலும்”

எனினும்

“இருவகைப் பிரிவும் நிலைபெறத் தோன்றலும்

உரிய தாகும் என்மனார் புலவர்”

இந்நூற்பாவிற்கு விளக்கம் கூறும் உரையாசிரியர்கள் இருவகைப்பிரிவு யாதென வரையறுப்பதில் வேறுபடுவதைக் காணமுடிகிறது (Ilampurananr, 2004). நச்சினார்க்கினியர் காலிற்பிரிவு, கலத்திற்பிரிவு என்றும் சோமசுந்தரபாரதியார் முதுவேனிற்பிரிவு, பின்பனிக்காலப்பிரிவு என்றும் ச.வே. சுப்பிரமணியன் பெரும்பொழுது, சிறுபொழுது பிரிவு என்றும் சிவலிங்கனார் களவிற்பிரிவு, கற்பிற்பிரிவு என்றும் இருவகைப்பிரிவை வகைப்படுத்துகின்றனர். இளம்பூரணர் தலைவன் தலைவியைப் பிரிதல் மட்டுமின்றி, தலைவி தமரைப் பிரிதலும் பாலைத்திணையின் உரிப்பொருள்பாற்படும் என்பதாக விளக்கியுள்ளார். பிறதிணைகள், தலைவன் - தலைவியை மட்டுமே மையப்படுத்தி, அவர்களுக்கிடையேயான புணர்தல், இருத்தல், இரங்கல், ஊடல் ஆகியவற்றை மட்டுமே காட்டும்போது இளம்பூரணரின் விளக்கத்தில் பாலைத்திணை தலைவன் - தலைவியைக் கடந்து, தலைவியைப் பிரியும் தமரையும் கருத்தில் கொள்கிறது.

## உடன்போக்கில் தாய் கூற்று நிகழுமிடங்கள்

உடன்போக்கில் தாய் கூற்று நிகழ்த்துமிடங்களைக் குறித்துத் தொல்காப்பியம் பின்வரும் நூற்பாவில் குறிப்பிடுகிறது.

“தன்னும் அவனும் அவளும் சுட்டி,

மன்னும் நிமித்தம், மொழிப் பொருள்-தெய்வம்,

நன்மை, தீமை, அச்சம் சார்தல் என்று

அன்ன பிறவும் அவற்றொடு தொகைஇ,

முன்னிய காலம் மூன்றுடன் விளக்கி,

தோழி தேஎத்தும் கண்டோர் பாங்கினும்,

போகிய திறத்து நற்றாய் புலம்பலும்

ஆகிய கிளவியும் அவ்வழி உரிய”

தன்னை, தலைவனை, தலைவியைச் சுட்டிப் புலம்புதல், நிமித்தம் பார்த்தல், விரிச்சி கேட்டல், தெய்வத்திடம் வேண்டுதல், நன்மை, தீமை, அச்சம் ஆகியவற்றைக் குறித்து எண்ணுதல் போன்றவை தாயின் செயல்பாடுகளாக இருக்கும் எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது (Ilampurananr, 2004).. இவற்றை இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகியவற்றோடு எண்ணிப் பார்த்து தோழியிடமும்

கண்டோரிடமும் புலம்புவதோடு மட்டுமின்றி பேரூர், சேரி, சுரம் ஆகிய இடங்களுக்குத் தலைவியையும் தலைவனையும் தேடிச்செல்லும் தாயரும் உண்டு எனத் தொல்காப்பியம் கூறுகிறது. அகநானூற்றில் மகட்போக்கிய தாயின் கூற்றாக இடம்பெற்றிருக்கும் 24 பாடல்களும் இந்தச் சூழல்களைத் தெளிவாகக் காட்டுகின்றன.

பேணி வளர்த்த மகள், தானறியாமல், பிரிந்து சென்றுவிட்டாள் என்ற சூழலில் தாயின் மனம் உணர்வுக்குமுறல் நிறைந்தது. அச்சூழலில் பேசும் தாயின் கூற்றுகளாக அமைந்திருக்கும் பாடல்களில் அவளது மனநிலையை வெளிப்படுத்தும் விதமாக பல்வேறு உணர்வுகள் வெளிப்படுகின்றன. "உடன்போக்கு மேற்கொண்ட மகளை நினைந்து புலம்பும் செவிலியின் தனிமொழிகள் தலைவன் மீதும் ஊர்ப்பெண்டிர் மீதும் கொண்ட சினத்தையும் தலைவயிடம் கொண்ட இரக்கத்தையும் தலைவியைப் பாதுகாவாத தன் மனத்தளர்ச்சி, அவலம், ஏக்கம் ஆகியவற்றையும் உணர்த்துவனவாக உள்ளன" (ஆ. அமிர்தகௌரி, சங்க இலக்கியத்தில் உரையாடல், ப. 222) தாயின் மனதில் வெளிப்படும் நுண்மையான இவ்வுணர்வுகளை அச்சம், கோபம், இரங்கல் என்ற மூன்று பெரும்பிரிவுகளுக்குள் அடக்க இயலும்.

## அச்சம்

மனித மனத்தின் அடிப்படையான உணர்வு அச்சம். அனைத்து உயிரினங்களுக்கும் இயற்கையாகவே தங்களைப் பாதுகாத்துக்கொள்ள ஆதாரமாக அமைந்திருக்கின்ற உணர்வாக அச்சம் இருக்கிறது. "அடிப்படையில் நம் மனித மூளை இன்னமும் பிரதானமாக ஒரு மிருக மூளைதான். முதுகுத்தண்டின் மேற்பகுதியில் இணைக்கப்பட்டுள்ள மூளையின் பின்பகுதிதான் புலனறிவுகளின் செயலகம். மிருகத்தின் முக்கியத் தேவைகள் தன் உயிர் காப்பதும் இரை தேடுவதும் இனப்பெருக்க உணர்வும்தான். அதற்குத் தேவையான செயல்பாடுகள் அடிப்படையான ஆதார உணர்வுகளைச் சார்ந்தவை. அச்சம்தான் நம் முதல் உணர்ச்சி. கோபம்கூட அடுத்த கட்டத்தில்தான் தோன்றுகிறது. அதனால்தான் அச்சத்தை நம் மூளை தேடிப்பிடித்து உள்வாங்கிக் கொள்கிறது" (Karthikeyan, 2019)

மகள் எங்கு சென்றாள் என்று அறியாத தாயின் மனதில் ஏற்படும் முதன்மை உணர்ச்சியும் அச்சமாகவே அமைந்திருக்கிறது. மகள் சென்ற வழியான சுரம் மீதான அச்சம், அவளை உடன் அழைத்துச் சென்ற தலைவனின் குணம் மீதான அச்சம், அவர்கள் எதிர்கொள்ளும் மனிதர்கள் மீதான அச்சம் என தாயின் அச்சத்திற்கான காரணங்கள் நீள்கின்றன.

உடன்போக்கு, தலைவி தமரைப் பிரிந்து தலைவனுடன் செல்வது என்பதைத் தாண்டி, செல்லும் வழியைப் பொறுத்து ஆபத்தானதாகவும் அமையக்கூடியதாக இருந்திருக்கிறது. ஏறத்தாழ எல்லாப் பாலைத்திணைப் பாடல்களுமே சுரத்தின் அருமையைப் பேசுகின்றன. அதீத வெப்பம், வறட்சி, ஆறலைக் கள்வர், போர், விலங்குகள் என அஞ்சத்தக்கனவாகப் பாலைத்திணைப் பாடல்கள் குறிப்பிடும் அனைத்துமே இறப்புக்கான காரணியாக அமைய தகுந்தவை. துணையை இழந்த அகமாந்தர்களை காட்டுவதற்கான இலக்கண அமைப்பு அகத்திணையில் இல்லை என்றாலும் இடைச்சுரத்தில் கணவனை இழந்து தவிக்கும் பெண்களைப் புறத்திணை காட்டுகிறது.

"நனிமிகு சுரத்திடைக் கணவனை இழந்து

தனிமகள் புலம்பிய முதுபாலையும்"

எனத் தொல்காப்பியம் குறிப்பிடும் முதுபாலைத் துறையில் இடம்பெற்றிருக்கும் புறநானூறு 253,254,255,256 ஆகிய பாடல்கள் இடைச்சுரத்தில் கணவனை இழந்து தவிக்கும் பெண்களின் அவலப்புலம்பலாக அமைந்துள்ளன. இப்பாடல்கள், அத்தகைய சுரவழியில் மகள் சென்றுவிட்டாள் என அறிந்து கலங்கும் தாயின் முதன்மை உணர்ச்சியாக அச்சம் வெளிப்படுவதைப் புரிந்துகொள்ள வழிவகுக்கின்றன.

தலைவியின் மென்மையான கால்கள் வெஞ்சுரத்தைக் கடந்து செல்லும் வலிமையுடையனவோ என அஞ்சும் தாயின் உணர்வினைப் பின்வரும் பாடலடிகள் புலப்படுத்துகின்றன.

"சிறுமுதுக் குறைவி சிலம்பு ஆர்சீறடி

வல்லகொல்

மாமலை விலங்கிய சுரனே!" (Vengatasaami Naattaar, 2019)

காட்டுத்தீ ஏற்படுவதால் பசுமை அற்றுப்போய் இருக்கும் காடு தலைவியின் மெல்லிய அடிக்கு ஏற்றவை அன்று என்ற அச்சத்தையும் தாயின் கூற்று வெளிப்படுத்துகிறது.

"ஒய்யெனத்

தெறு கதிர் உலைஇய வேனில் வெங் காட்டு,

உறு வளி ஒலி கழைக் கண் உறுபு தீண்டலின்,

பொறிபிதிர்பு எடுத்த பொங்குஎழு கூர்எரிப்

பைதுஅறு சிமையப் பயம் நீங்கு ஆர் இடை

நல் அடிக்கு அமைந்தஅல்ல - மெல்லியல்

வல்லுநள்கொல்லோ தானே" (Vengatasaami Naattaar, 2019)

கள்வரின் தண்ணுமை ஒலி கேட்டு, உறங்காமல் தலைவி அஞ்சுகிறாளோ எனக் கலங்குகிறாள்.

"தோள் துணையாகத் துயிற்றத் துஞ்சாள்,

வேட்டக் கள்வர் விசியுறு கடுங் கண்

சேக் கோள் அறையும் தண்ணுமை

கேட்குநள்கொல்? எனக் கலுழும் என் நெஞ்சே"

ஆநிரை கவர்தல் - மீட்டல் ஆகிய போர்கள் நடக்கும் பாலைச்சுரம் என்ற அச்சமும் தாய்க்கு ஏற்படுகிறது (Vengatasaami Naattaar, 2019).

"கனைஎரி நடந்த கல் காய் கானத்து

வினை வல் அம்பின் விழுத் தொடை மறவர்

தேம் பிழி நறுங் கள் மகிழின், முனை கடந்து,

வீங்கு மென் சுரைய ஏற்றினம் தரூஉம்

முகை தலை திறந்த வேனிற்

பகை தலைமணந்த பல் அதர்ச் செலவே?"

இவை தவிர, நடுகற்களும், கரடி, தனித்திருக்கும் ஆண்யானை போன்ற விலங்குகளும் தலைவி அஞ்சுவாள் என்ற தாயின் அச்சத்திற்குக் காரணிகளாக அமைகின்றன (Vengatasaami Naattaar, 2019).

இத்தகைய சுரத்தில் அழைத்துச் சென்ற தலைவன், தலைவியை நன்றாகப் பார்த்துக்கொள்ள வேண்டுமே என்ற அச்சம், தெய்வத்திடம் வேண்டுதலாக வெளிப்படுகிறது. அறியாத தேயத்தில் துணையாக அமைந்த தலைவன், தலைவியை அன்போடு பார்த்துக்கொள்ள வேண்டும் என வேண்டுகிறாள்.

"ஆர்வ நெஞ்சமொடு ஆய்நலன் அளைஇ, தன்

மார்பு துணையாகத் துயிற்றுகதில்ல

என் பேதைக்கு,

அறியாத் தேஎத்து ஆற்றிய துணையே" (Vengatasaami Naattaar, 2019)

தலைவனும் தலைவியும் செல்கிற ஊர்மக்கள், வெறுங்கையோடு வருகிறவர்களையும் அன்போடு பார்த்துக்கொள்பவராக அமைதல் வேண்டும் என்ற தாயின் வேண்டலையும் காணமுடிகிறது.

“வறுங் கை வம்பலர்த் தாங்கும் பண்பின்

செறிந்த சேரிச் செம்மல் மூதூர்,

அறிந்த மாக்கட்டு ஆகுகதில்ல” (Vengatasaami Naattaar, 2019)

## இரங்கல்

அச்சத்தின் அடுத்தபடிநிலையாக தலைவியை எண்ணியும் தன்நிலையை எண்ணியும் தாய் இரங்குவதைப் பார்க்கமுடிகிறது. மகள் உடன்போக்கு செல்வதற்கான முக்கியக் காரணிகளுள் ஒன்றாக தாயின் கண்டிப்பு இருப்பதை அறியமுடிகிறது. அலர் எழுந்து அன்னை கண்டிப்பதாலோ, அன்னை அலரை அறிந்துவிடுவாளோ என்ற அச்சத்தினால் தலைவி உடன்போக்கு செல்கிறாள். இடைவிடாமல் அடிக்கும் அறனில்லாத அன்னை தன் வீட்டில் தானே தனித்திருக்கட்டும் என தோழி உடன்போக்கு நேர்வதைப் பின்வரும் குறுந்தொகைப் பாடல் காட்டுகிறது.

“ஊஉ ரலரெழச் சேரி கல்லென

ஆனா தலைக்கும் அறனி லன்னை

தானே இருக்க தன்மனை”

‘அன்னையை எதிர்க்கும் ஆயுதம்’ என எண்ணி மகள் உடன்போக்குச் செல்வதாக முனைவர் சு. கோகிலவாணி குறிப்பிடுகிறார் (Iraakavaiyangaar, 2016).

“யாய் அறிவுறுதல் அஞ்சி,

வேய் உயர் பிறங்கல் மலை இறந்தோளே”

தலைவி அன்னை அறிதல் அஞ்சி உடன்போக்கு சென்றதாக மேற்கண்ட அகநானூற்றின் பாடலடிகள் குறிப்பிடுகின்றன. தன்னுடைய களவை அன்னை அறிந்துவிட்டால் உயிரோடு இருப்பேனா என்று மறுகும் அளவிற்குத் தலைவி தன் களவொழுக்கத்தைத் தாய் அறியாமல் இருக்க வேண்டும் என விரும்புவதை ஒரு குறுந்தொகைப் பாடல் வழி அறியமுடிகிறது (Vengatasaami Naattaar, 2019).

“நோய்மலி வருத்தம் அன்னை அறியின்

உளனோ வாழி தோழி” (Iraakavaiyangaar, 2016)

அன்னை அடிப்பதால் மட்டுமின்றி, தங்கள் களவொழுக்கத்தை அறிந்தும் அமைதியாக இருப்பதால் ஏற்படும் குற்ற உணர்வினாலும் தலைவி உடன்போக்கு செல்வதைக் காணமுடிகிறது. ஊர்ப்பெண்டிர் அலர் சொல்லும்போது அவர்களை ‘நிரையப் பெண்டிர்’ என விளித்துத் தெய்வத்திடம் வேண்டும் அன்னையைக் கண்ட தலைவி, அவள்முன் தன் களவு வெளிப்படுவதற்கு நாணி உடன்போக்குக்கு உடன்படுகிறேன் என்று கூறும் பாடல் அகநானூற்றில் இடம்பெற்றுள்ளது.

“கௌவை மேவலர் ஆகி இவ்வூர்

நிரையப் பெண்டிர் இன்னா கூறுவ

புரைய அல்ல, என்மகட்குஎனப் பரைஇ,

நம்உணர்ந்து ஆறிய கொள்கை

அன்னை முன்னர் யாம்என் இதற்படலே”

அலர்வழி மகளது களவை உணர்ந்தும் அமைதியாக இருக்கும் அன்னையை இனியும் ஏமாற்றுவதற்கு மனம் நாணி, இதன்மேலும் அவள்முன் களவொழுக முடியாது என உடன்போக்குக்கு உடன்படும் தலைவியின் மனப்போக்கு குறிப்பிடத்தக்கது (Vengatasaami Naattaar, 2019).

தாயின் மீதான அச்சம், அன்பு இரண்டுமே உடன்போக்கிற்கான காரணமாக அமைந்திருப்பதைப் பார்க்கமுடிகிறது. உடன்போக்கிற்கான காரணம் தாயே என வ.சுப.மாணிக்கனார் குறிப்பிடுகிறார். “தாய்ப்பெயரை இழுத்தும் அவட்குமுன் வந்தும் ஊரினர் அலர் கூறுவராதலின் மகள் களவொழுக்கத்தால் மனங்கசப்பவளும் கொதிப்பவளும் ஈன்றாளே. உடன்போக்குத் துறை பற்றிய பாடல்களைத் தொகுத்துவைத்து நோக்கின் அப்போக்குக்குக் காரணள் தாய் என்பது தெளிவாம். … அலரச்சத்தால் தன்மகள் உடன்போகலாயிற்று என்று குற்றம் பகரினும் அலர்கேட்டு அன்னை சீறுவாள் என்ற தாயச்சமே முடிந்த காரணம் என உய்த்துணரப்படும்.” (Subamanikkam, 1962)

மகள் இவ்வாறு தான் அடிப்பதால்தான் உடன்போக்கு சென்றுவிட்டாள் என அவளை அடித்த கைகள் திதியனின் புன்னை மரத்தினைப் போலத் துன்புறட்டும் என வருந்தும் தாயை இப்பாடல் காட்டுகிறது.

“அன்னி குறுக்கைப் பறந்தலை, திதியன்

தொல் நிலை முழு முதல் துமியப் பண்ணிய

நன்னர் மெல் இணர்ப் புன்னை போல,

அமர்க் கண் அஞ்ஞையை அலைத்த கையே!” (Vengatasaami Naattaar, 2019)

கொடுமையான வேனிற்பருவக்காட்டில் ஆள் இல்லாத வழியில் மகள் செல்வதற்குக் காரணமாக அமைந்துவிட்டோமே என்ற குற்ற உணர்ச்சி தாயின் கூற்றில் வெளிப்படுகிறது.

பிறர்வழியாக மகளது களவொழுக்கத்தை அறிந்தபின்னும் தான் அறிந்ததாகக் காட்டிக்கொண்டால் மகள் நாணுவாள் என்பதால் அறியாதது போல இருந்த தாயையும் அகநானூறு காட்டுகிறது.

“இன்னள் இனையள், நின் மகள்என, பல் நாள்

எனக்கு வந்து உரைப்பவும், தனக்கு உரைப்பு அறியேன்,

நாணுவள் இவள் என, நனி கரந்து உறையும்

யான் இவ் வறு மனை ஒழிய” (Vengatasaami Naattaar, 2019).

இப்பாடலே ‘உவக்குநள் ஆயினும் உடலுநள் ஆயினும்’ எனக் குறிப்பிடுவதால் மகளின் களவொழுக்கம் அறிந்து உவந்த தாயரும் உண்டு என்பதையும் அறிய முடிகிறது. இவ்வாறு மகளது களவை அறிந்து அவளிடம் கோபத்தையும் காட்டாமல், அவளது களவை ஏற்று அமைதியாகவும் இல்லாமல் வேறு காரணங்களைச் சொல்லி இற்செறிக்கும் அன்னையையும் அகநானூறு காட்டுகிறது. தொன்மையான ஊர் தாக்கணங்கை உடையது என்று கூறி பெதும்பைப் பருவத்தில் வெளியே செல்ல வேண்டாம் என இற்செறிக்கிறாள்.

“அலமரல் ஆயமோடு யாங்கணும் படாஅல்

மூப்புடை முதுபதி தாக்குஅணங்கு உடைய

காப்பும் பூண்டிசின் கடையும் போகலை

பேதை அல்லை மேதைஅம் குறுமகள்

பெதும்பைப் பருவத்து ஒதுங்கினை புறத்துஎன” (Vengatasaami Naattaar, 2019)

இவ்வாறு இற்செறிக்காமல் விட்டுவிட்டேனே எனப் புலம்பும் தாயரையும் அகநானூற்றுப் பாடல்கள் காட்டுகின்றன.

“பெண் துணை சான்றனள், இவள்எனப் பல் மாண்

கண் துணை ஆக நோக்கி, நெருநையும்,

அயிர்த்தன்றுமன்னே, நெஞ்சம் பெயர்த்தும்,

அறியாமையின் செறியேன்” (Vengatasaami Naattaar, 2019)

நெஞ்சம் சொல்லியும் இற்செறிக்காமல் விட்டுவிட்ட தனது அறியாமையை எண்ணிப் புலம்பும் தாயோடு, அவள் உடன்போக்கு செல்வதை அறிந்திருந்தால் மகளை நிழல்போல் அகலாதிருந்திருப்பேனே எனப் புலம்பும் தாயையும் காணமுடிகிறது.

“காடு உடன்கழிதல் அறியின் தந்தை

அல்குபதம் மிகுத்த கடிஉடை வியல் நகர்,

செல்வுழிச் செல்வுழி மெய்ந்நிழல் போல,

கோதை ஆயமொடு ஓரை தழீஇ,

தோடு அமை அரிச் சிலம்பு ஒலிப்ப, அவள்

ஆடுவழி ஆடுவழி, அகலேன்மன்னே!” (Vengatasaami Naattaar, 2019)

தலைவி உடன்போக்கு சென்றதற்குத் தன்னைக் காரணமாக எண்ணி நொந்துகொள்ளும் தாயின் மனப்போக்கு இரங்கத்தக்கது.

மகள் தலைவனிடம் கொண்டிருந்த அன்பு தெரிந்திருந்தால் தானே மணம் செய்து வைத்திருப்பேனே என்று புலம்பும் தாயரையும் பார்க்க முடிகிறது. உறந்தை போன்ற நகர், கூடல் போன்ற நகர், வஞ்சி அன்ன நகர் எனத் தலைவியின் மனையை விளித்து அத்தகைய மனையில் மணம் செய்யாமல், எங்கோ சென்று மணம் செய்துகொள்கிறாளே என்ற வருத்தமும் வெளிப்படுவதைப் பார்க்கமுடிகிறது.

“அவள் துணிவு அறிந்தனென்ஆயின், அன்னோ!

ஒளிறு வேல் கோதை ஓம்பிக் காக்கும்

வஞ்சி அன்ன என் வள நகர் விளங்க,

இனிதினின் புணர்க்குவென் மன்னோ துனி இன்று

திரு நுதல் பொலிந்த என் பேதை

வரு முலை முற்றத்து ஏமுறு துயிலே!” (Vengatasaami Naattaar, 2019)

உடன்போக்கு சென்ற மகள், தலைவன் வீட்டிற்குச் செல்லாமல் தன் வீட்டிற்கு முதலில் வரவேண்டும் என்ற எதிர்பார்ப்பு தாயிடம் இருப்பதை அகநானூறு காட்டுகிறது. தன் வீட்டிற்கு வருவானா? அவன் வீட்டிற்குச் செல்வானா? யாது அவன் குறிப்பு என நிமித்தம் கேட்கும் தாயைக் காணமுடிகிறது. அந்த எதிர்பார்ப்பு நிறைவேறுமோ இல்லையோ என்ற பதைப்பு தன்னிரக்கத்திற்குக் காரணமாக அமைகிறது. தலைவியை ஈன்றவள் என்று கருதா விடினும் அவளுக்குப் பலநாள் கூந்தல் வாரி, நலம் புனைந்து உதவியிருக்கிறேன். அதையாவது அறிந்தால் நல்லது எனத் தனக்குத் தானே இரங்குவதை கீழ்க்காணும் பாடல் காட்டுகிறது.

“மான் பிணை நோக்கின் மட நல்லாளை

ஈன்ற நட்பிற்கு அருளான் ஆயினும்,

இன் நகை முறுவல் ஏழையைப் பல் நாள்,

கூந்தல் வாரி, நுசுப்பு இவர்ந்து, ஓம்பிய

நலம் புனை உதவியும் உடையன்மன்னே

அஃது அறிகிற்பினோ நன்றுமன் தில்ல” (Vengatasaami Naattaar, 2019)

## கோபம்

மகட்போக்கிய தாயின் கூற்றாக அமையும் பாடல்களில் தாயின் கோபம் பெரும்பாலும் தலைவன் மீதாகவே வெளிப்படுகிறது. தலைவி உடன்போக்கு சென்றதை அறிந்தவுடன் ஆநிரையைக் கவர்ந்து சென்ற கள்வரின் பின்னால் ஓடுவது போல ஓடுவதாக ஒரு தாய் குறிப்பிடுவதை அகநானூற்றில் காணமுடிகிறது.

"அத்தக் கள்வர் ஆதொழு அறுத்தென

பிற்படு பூசலின் வழிவழி ஓடி,

மெய்த்தலைப் படுதல் செல்லேன்" (Vengatasaami Naattaar, 2019)

ஆநிரை என்பது அக்காலத்தில் செல்வத்திற்கான அடையாளமாக இருந்திருக்கிறது. இருநாடுகளுக்கிடையேயான போரின் முதல் படியாக வெட்சி - கரந்தை அமைந்திருப்பதைப் புறத்திணை காட்டுகிறது. தலைவியைத் தலைவன் உடன்போக்காக அழைத்துச்சென்றதைக் கள்வரிடம் செல்வத்தைப் பறிகொடுத்ததற்கு இணையாகக் கூறுகின்றாள். அதுமட்டுமின்றி, பல பாடல்கள், தலைவியைச் சீராட்டி வளர்த்ததைக் குறிப்பிடுகின்றன. அப்படிப்பட்டவளைத் தங்களிடமிருந்து பிரித்து சென்ற தலைவனின் மீதான தாயின் கோபம் புரிந்துகொள்ளக் கூடியதாக இருக்கின்றது. தலைவனை அறனிலாளன், நொதுமலாளன், ஏதிலாளன், கடுங்கண் காளை என்றும் தலைவி தலைவனின் பொய்மொழியை நம்பி சென்றுவிட்டாள் என்றும் தாய் பல பாடல்களில் குறிப்பிடுகிறாள்.

தானும் அவன் தாயும் மகிழ, மனையில் மணம் செய்ய எண்ணாத தலைவன், உடன்போக்கு என்றாலும் கூட தணிந்த பருவம் கருதி தலைவியை அழைத்துச்செல்வோம் என்றும் கருதாமல் அழைத்துச்சென்றுவிட்டானே எனக் கருதும் தாயின் கோபத்தை பின்வரும் பாடல் காட்டுகிறது.

"கல் பகக்

கணமழை துறந்த கான்மயங்கு அழுவம்

எளியவாக, ஏந்து கொடிபரந்த

பொறிவரி அல்குல் மாஅயோட்கு எனத்

தணிந்த பருவம் செல்லான்" (அகம். 397)

தலைவனிடம் மட்டுமின்றி தலைவியிடமும் தாயின் கோபம் வெளிப்படுகிறது. கொடியோள், வன்கண்ணி, பிறள் ஆயினள் என்று தலைவியையும் திட்டும் தாயின் கோபத்தை அகநானூறு பதிவுசெய்துள்ளது.

"ஈன்று புறந்தந்த எம்மும் உள்ளாள்"

"தொடிமாண் சுற்றமும் எம்மும் உள்ளாள்"

"தற்புரந்து எடுத்த எற்துறந்து உள்ளாள்"

மேற்குறித்த பாடல்தொடர்கள், தங்களை எண்ணிப்பார்க்காமல் தலைவி சென்றுவிட்டாள் என்ற கோபத்தையும் வருத்தத்தையும் வெளிப்படுகின்றன (Vengatasaami Naattaar, 2019).

"அத்த இருப்பை ஆர்கழல் புதுப்பூத்

துய்த்த வாய, துகள் நிலம் பரக்க,

கொன்றைஅம் சினைக் குழற்பழம் கொழுதி

வன் கை எண்கின் வய நிரை பரக்கும்"

வழியில் கண்ட இருப்பை மரத்தின் புதுப்பூவைத் தின்ற கரடி கொன்றைப்பழத்தை உலுக்கிவிட்டுப் போகும் என்ற பொருளில் வரும் மேற்கண்ட பாடலடிகள், புதிதாக வந்த

தலைவனுக்காகத் தங்களை விட்டுச் சென்றுவிட்டாள் என உள்ளுறை வழி தலைவியைக் குற்றம் சாட்டுகின்றன. (Vengatasaami Naattaar, 2019) மகள் மீதான கோபத்தின் உச்சமாக அவள் உடன்போக்கு சென்றுவிட்டாள் என்று வருந்தவில்லை, என்னைப் பிரிந்து என் உயிர் செல்லாமல் இருக்கின்றதே என்றுதான் வருந்துகிறேன் எனப் புலம்புவதாகப் பின்வரும் பாடல் அமைகிறது.

"பெரும்பிறிது ஆகியாங்கு பிரிந்து இவண்

காதல் வேண்டி, எற் துறந்து

போதல்செல்லா என் உயிரொடு புலந்தே"

இப்பாடல் தாய், அயலாரிடம் பேசுவதாக அமைந்துள்ளது. சமூகம் மீதான பயம் தரும் அழுத்தம் தாயை இப்படி பேச வைப்பதாகவும் எடுத்துக்கொள்ள இயலும் (Vengatasaami Naattaar, 2019).

## முடிவுரை

மகட்போக்கிய தாயின் கூற்றுகளாக அமைந்திருக்கும் இப்பாடல்கள் தோழி, அயலார், தெய்வம், வேலன் போன்றோரிடமும் தலைவி வளர்த்த வயலைக்கொடி, வழியில் கண்ட மான் போன்ற அஃறிணை உயிர்ளிடமும் தாய் புலம்புவதாக அமைந்துள்ளன. தாயின் ஆற்றாமையை ஆற்றும் வடிகாலாகவே இப்புலம்பல்கள் இருப்பதை உணர முடிகிறது. இப்பாடல்களில் இடம்பெறும் தாயின் உணர்வுநிலைகளை அச்சம், இரங்கல், கோபம் எனும் மூன்று மெய்ப்பாடுகளாகப் பிரித்தறிய முடிகிறது. அச்ச உணர்விற்கான காரணமாக, தலைவி சென்ற சுரத்தின் அருமை, தலைவன் அறியாதவனாக இருக்கின்றமை போன்றவை இருக்கின்றன. இரங்கலுக்கு அடிப்படையாக, தலைவி உடன்போக்கு சென்றதற்கான காரணம் தான் என்ற குற்ற உணர்ச்சி, மகளை இற்செறித்துப் பாதுகாவாமல் விட்டுவிட்டோம் என்ற எண்ணம், மகளது களவை அறிந்திருந்தால் தானே மணம் செய்து வைத்திருக்கலாமே என்ற ஏக்கம் ஆகியவை இருக்கின்றன. கோபத்திற்கான காரணங்களாக, தலைவி தங்களை எண்ணிப்பார்க்காமல் சென்றமையும் தலைவன் அவளைக் கடும்பருவத்தில் அழைத்துச் சென்றமையும் அமைகின்றன. இவற்றைத் தூண்டும் காரணியாக ஊரில் எழும் அலர் இருப்பதை அறியமுடிகிறது. அகநானூற்றில் அமைந்துள்ள மகட்போக்கிய தாயின் கூற்றுக்கள் அவளது மனஅழுத்தத்துடன், சமூகம் தரும் அழுத்தத்தையும் இணைத்தே வெளிப்படுத்தும் போக்கானது, காலந்தோறும் காணலாகும் பெண்களின் நிலை குறித்தும் சிந்தனை கொள்ளச் செய்கிறது.

## References


Ilampurananr, (2004) Tholkappiyam, Gowra Puthaga Nilayam, Trichy, India.

Iraakavaiyangaar, I. (2016) Kurunthogai Vilakkam, Gowra Publications, Chennai, India.

Karthikeyan, R. (2019) Manasu Pola Vaazkai, the Hindu, Chennai, India.

Subamanikkam, V.S. (1962) Tamil Kadhal, Paari Nilayam, Chennai, India.

Vengatasaami Naattaar, N.M. (2019) Akananooru, Gowra Publications, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.


**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License